Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC.554/2023 PW-1**

Name : பாலாஜி
Father / Husband name : ராமன்
Village : திண்டிவனம்
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.08.2025

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**சாட்சி மனுவில்பேரில் மீண்டும் அழைக்கப்பட்ட எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிடெக் சிவில் இன்சினியரிங் படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். காசோலையை எந்த தேதியில் எதிரி என்னிடம் கொடுத்தார் என்று புகார் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் மேற்படி தேதி உள்ளதா என்றால் தேதி குறிப்பிடவில்லை, 6 மாதத்திற்கு முன்பு கொடுத்ததாக சொல்லியுள்ளேன். வழக்கின் காசோலை தொகையை எதிரி எந்த தேதியில் என்னை சந்தித்து கேட்டார் என்று குறிப்பிட்டு புகார் மற்றும் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் காசோலை தொகையை எதிரியை எந்த தேதியில் நான் சந்தித்து திரும்பகேட்டேன் என்று குறிப்பிட்டு புகார் மற்றும் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் காசோலையை எந்த தேதியில் எதிரி கொடுத்தார் என்று புகார் மற்றும் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, 10.08.2023 ல் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். தற்போது என்னிடம் புகாரில் மேற்படி தேதி உள்ளதா என்றால் இல்லை.

2. வழக்கின் காசோலையை இரண்டு மாதம் கழித்து வங்கியில் செலுத்தியதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு மாதகால இடைவெளியில் எதிரியின் வங்கிக்கு சென்று அவரின் கணக்கில் பணம் உள்ளதா என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் சொந்தமாக கட்டுமான வேலை செய்கிறேன். எந்த பெயரில் கட்டுமான பணி செய்கிறேன் என்றால் பாலாஜி கன்ட்ரக்சன் என்ற பெயரில் செய்கிறேன். அதனை பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. பாலாஜி கன்ட்ரக்சன் குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதுகுறித்து ஆவணம் கையில் உள்ளதா என்றால் இல்லை. பாலாஜி கன்ட்ரக்சன் எந்த முகவரியில், எத்தனை வருடமாக நடத்துகிறேன் என்றால் 10, 15 வருடமாக திண்டிவனம் 3/2 மணியன் கந்தசாமி தெருவில் எனது வீட்டில் நடத்திவருகிறேன்.

3. ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டிடம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எத்தனை கட்டிடம் கட்டிக்கொடுத்துள்ளேன் என்றால் 5, 6 கட்டிக்கொடுத்துள்ளேன். யார் யாருக்கு எங்கு கட்டிக்கொடுத்தேன் என்றால் சொல்லமுடியாது, அது நினைவில்லை. மேற்படி நபர்களுடன் ஒப்பந்தம் செய்தேனா என்றால் செய்தேன். அதன் நகல் உள்ளதா என்றால் தற்போது இல்லை. எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் வேலையை பொறுத்து சுமார் ரூ.50,000/- வரும். நான் வருமானவரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. மேற்படி வருமானத்திற்கு ஆதாரம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. கட்டுமான சங்கத்தில் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையாகவே கட்டுமான தொழில் செய்துவந்தால் அதற்கான ஆவணம் இருக்கும், நான் கட்டுமான பணி செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது குடும்பத்தில் எத்தனை நபர்கள் என்றால் நான் எனது மனைவி, மகன். புகாரில் குறிப்பிட்டுள்ள முகவரியில் வசிக்கிறோமா என்றால் ஆமாம்.

4. எவ்வளவு நாளாக மேற்படி முகவரியில் வசிக்கிறேன் என்றால் 15 வருடமாக இருக்கிறேன். அது எனது சொந்த வீடா என்றால் ஆமாம். அந்த வீடு எப்போது வாங்கினேன் என்றால் பரம்பரை சொத்து. எனது அப்பா என்ன வேலை செய்தார் என்றால் மாவட்ட தொழில் மையத்தில் இணை இயக்குநராக இருந்தார், தற்போது இறந்துவிட்டார். எனது அப்பாவிற்கு எனது தெருவிலிருக்கும் சண்முகம் என்பவர் அப்பாவிற்கு பழக்கம் என்றால் சரிதான். அந்த சண்முகம் என்பவர் டிஆர்எஸ் பிரபுவின் தகப்பனார் என்றால் தெரியாது. டிஆர்எஸ் பிரபுவின் தகப்பனார் தான் சண்முகம் என்பது தெரிந்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. டிஆர்எஸ் பிரபு எங்கள் தெருவில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். டிஆர்எஸ் பிரபுவின் எனக்கு பழக்கமானவர் என்றால் பேசியுள்ளேன். எவ்வளவு நாளாக டிஆர்எஸ் பிரபு எனக்கு பழக்கம் என்றால் 14 வருடம் பழக்கம்.

5. எங்களுக்குள் நல்ல பழக்க வழக்கம் தான் என்றால் சரிதான். டிஆர்எஸ் பிரபுவை நான் தினமும் சந்திப்பேன் என்றால் இல்லை, எப்போதாவது வழியில் பார்த்தால் பேசுவேன், குறிப்பிட்டு சொல்லமுடியாது. டிஆர்எஸ் பிரபுவின் அப்பாவின் பெயர் என்ன என்றால் தெரியாது. வழக்கின் எதிரி சொந்த வீட்டில் வசிக்கிறாரா அல்லது வாடகை வீட்டில் வசிக்கிறா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியின் குடும்ப உறுப்பினர் எத்தனை நபர்கள் என்று தெரியாது என்றால் சரிதான். வழக்கின் எதிரியின் வீட்டிற்கு நான் சென்றது இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எதிரியை எத்தனை முறை சந்தித்தேன் என்றால் 4, 5 முறை சந்தித்தேன். வழக்கின் எதிரி எப்படி கையொப்பம் செய்வார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

6. அவரின் கையொப்பத்தை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரியல்ல, என் முன்பாக கையொப்பம் செய்து காசோலையை கொடுத்தார். அவ்வாறு எதிரி என்

முன்னர் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை, வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் டிஆர்எஸ் பிரபு எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் இரண்டு வாய்தாக்களுக்கு முன்பு டிஆர்எஸ் பிரபு அவருடைய வழக்கில் ஆஜராகி சாட்சியம் அளித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அன்றையதினம் இருவரும் ஒன்றாக நீதிமன்றம் வந்தோம் என்றால் சரியல்ல. வழக்கின் காசோலை தொகை எனக்கு எப்படி கிடைத்தது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் காசோலை தொகை எனக்கு எப்படி கிடைத்தது என்றால் கையிலிருந்த எனது சேமிப்பு பணம். நான் வீட்டில் ரொக்கமாக வைத்திருந்த பணம் யாருக்காவது தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு நான் வைத்திருக்கவில்லை, அதனால் யாருக்கும் தெரியவில்லை என்றால் சரியல்ல.

7. வழக்கின் காசோலை யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் காசோலையை என்னிடம் நேரடியாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் காசோலையை என்னிடம் நேரடியாக கொடுக்காததால் அதனை பூர்த்தி செய்தது எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரி பதில் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் இல்லை, வழக்கு தாக்கல் செய்த பின்னர் கொடுத்தார். அந்த பதில் அறிவிப்பில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த அறிவிப்பில் டிஆர்எஸ் பிரபுவிடம் வழக்கின் காசோலை மற்றும் மற்றொரு காசோலை சீட்டுத்தொகைக்காக கொடுத்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். இதுசம்மந்தமாக டிஆர்எஸ் பிரபுவிடம் கேட்டேனா என்றால் இல்லை. அது உண்மை என்பதால் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

8. பதில் அறிவிப்பு கொடுத்த பிறகு டிஆர்எஸ் பிரபுவை நான் சந்தித்தேனா என்றால் இல்லை. டிஆர்எஸ் பிரபுவை நான் பலமுறை சந்தித்தேன்,

வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் காசோலையின் எண் என்ன என்றால் 019366 ஆகும். டிஆர்எஸ் பிரபு தாக்கல் செய்த வழக்கில் வழக்கின் காசோலை எண் 019367 என்றால் தெரியாது. இரண்டு வழக்கிற்கும் ஒரே வழக்கறிஞர் என்றால் தெரியாது. வழக்கில் தாக்கல் செய்த பிறகு டிஆர்எஸ் பிரபுவை நீதிமன்றத்தில் பார்த்தேனா என்றால் ஒருமுறை பார்த்துள்ளேன். அவரை விசாரித்தேனா என்றால் இல்லை. வழக்கின் எதிரி எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளார் என்றால் திண்டிவனம் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி. எதிரியின் வங்கி கணக்கு என்ன என்று தெரியுமா என்றால் தெரியும், 189100050305208 ஆகும். நான் கட்டிட ஒப்பந்த தொழில் செய்வதற்கு முன்னர் என்ன வேலை செய்தேன் என்றால் அரசதுறையில் டெக்னிக்கல் அசிஸ்டன்ட் வேலை 2006 - 2014 வரை வேலை செய்தேன்.

9. எதற்கு அந்த வேலையை விட்டுவிட்டு வந்தேன் என்றால் வருமானம் போதுமானதாக இல்லை என்று வந்தேன். நான் வேலை செய்த காலத்தில் வந்த வருமானம் எனது குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை என்றால் சரிதான். கட்டிட வேலையில் வருமானம் போதுமானதாக இல்லை என்றால் சரியல்ல. கட்டிட வேலை செய்துகொடுத்த நபர்கள் வாய்ப்புக்கொடுத்தால் அவர்களின் பெயர் ஞாபகபடுத்தி அடுத்த வாய்தாவில் சொல்ல இயலுமா என்றால் இயலாது.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/ M.Elavarasi,

Judicial Magistrate No.I, Tindivanam